# Tamil Murli Quiz 12-01-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

*Q.1)* **சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**
**எந்த உறுதி மொழியைத் தகர்ப்பதற்காக ஏமாற்றுப்பேர்வழியான மாயை முயற்சி செய்கிறது? அதை மீறுவதால் நிறைய தண்டனையும் அடைய வேண்டியிருக்கிறது?**

- A. பாபாவைத் தவிர தன்னுடைய மற்றும் பிற தேகதாரியிடம் மனதை வைக்க மாட்டோம்
- B. காமம் குரோதம் லோபம் மோகம் மற்றும் அகங்காரம் ஆகிய 5 விகாரங்களையும் விட்டு விடுவோம்
- C. இந்த புருஷோத்தம் சங்கமயுகத்தில் அனைத்து ப்ராப்திகளையும் அடைந்தே தீருவோம்
- D. பாபா ஒருவரைத் தவீர வேறு யாரும் இல்லை

*Q.2)* **சரியா? தவறா?**
**பதீதமானவர்கள் தனது விகர்மங்களின் தண்டனையை நிச்சயமாக அனுபவிக்க வேண்டும். கடைசியில் ஒரு பிறவி கொடுத்தாவது தண்டனையை வழங்குவார். மனித உடலில் தான் தண்டனை அடைவார்கள். ஆகவே, சரீரத்தை நிச்சயமாக எடுக்க வேண்டும்.**

- A. சரி
- B. தவறு

*Q.3)* **பொருத்துக:**

| | Choice | Match |
|---|---|---|
| A | விகாரத்தில் ஈடுபடுகிறவர்கள் | பதீதமானவர் |
| B | பக்தியின் ராஜ்யம் | இராவண ராஜ்யம் |
| C | தேக உணர்வு | மிகக் கடுமையான நோயாகும் |
| D | ஆத்மாக்களாகிய நாம் பிந்துவாக இருக்கிறோம் | நம்முடைய தந்தை விதை ரூபமாக ஞானம் நிறைந்தவராக இருக்கிறார் |
| E | சஞ்ஜீவினி மூலிகை | மன்மனாபவ மந்திரம் |

*Q.4)* **சரியான விடைக் கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்பவும்:**
**_________________________ தான் முழு நாடகத்திலும் மகத்துவம் இருக்கிறது. ஆனால் அவர்களை வேறு யாரும் அறியவில்லை.**

- A. சிவபாபா மற்றும் தேவதைகளுக்குத்
- B. ஆத்மா மற்றும் பரமாத்மாவிற்குத்
- C. மகாத்மா மற்றும் தேவாத்மாக்களுக்குத்
- D. தந்தை மற்றும் குழந்தைகளுக்குத்

*Q.5)* **சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**
**பாபாவை நினைத்தால் _____________ என்ற நோய் விலகி விடும்**

- A. விகாரம்
- B. சோம்பல்
- C. தேக உணர்வு
- D. மனக்கசப்பு

*Q.6)* <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**உண்மையிலும் உண்மையான நினைவாகும் என்று எந்த வையான நினைவினை பாபா கூறுகிறார்?**

- A. யதார்த்தமாக புத்தியில் புரிந்துக் கொண்டு அனுபவியாகி நினைப்பது
- B. யதார்த்தமாக புத்தியில் புரிந்துக் கொண்டு நினைப்பது
- C. உண்மையாக புரிந்துக் கொண்டு கஷ்டப்படாமல் நினைப்பது
- D. உண்மையாக புரிந்துக் கொண்டு முழு நாளும் நினைப்பது

*Q.7)* <u>சரியா? தவறா?</u>

**இராஜ்யத்தை உருவாக்குவதில் எவ்வளவு கஷ்டம் இருக்கிறது அது உடல் வலிமையாகும். இது யோக வலிமையாகும். இந்த விஷயங்கள் சாஸ்திரங்களில் இல்லை. உண்மையில் நீங்கள் எந்த சாஸ்திரத்தையும் குறிப்பெடுக்கத் தேவை இல்லை. நீங்கள் சாஸ்திரங்களை ஏற்றுக் கொள்கிறீர்களா என ஒரு வேளை கேட்டால் ஆம், இது அனைத்தும் பக்தி மார்க்கத்தினுடையது என கூறுங்கள்.**

- A. சரி
- B. தவறு

*Q.8)* <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**______________ சேமித்தால் நேரம், பேச்சு, அனைத்தும் தானாகவே சேமிப்பாகும்.**

- A. ஞானத்தைச்
- B. யோகத்தின் மூலம் சக்தியைச்
- C. சங்கல்பங்களை

*Q.9)* <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**நினைவினால் தான் தூய்மையாக முடியும். முதலில் ________ நிலையை அடைய வேண்டும் அல்லவா? அவர்களே உயர்ந்த பதவி அடைவார்கள்.**

- A. சுய - ஆத்ம
- B. கர்மாதீத
- C. விஷ்ணு

*Q.10)* <u>சரியா? தவறா?</u>

**மிக நன்றாக முரளியை நடத்துபவர்கள் கூட யோகா மிக குறைவாகவே செய்கின்றனர். தேக உணர்வு நிறைய இருக்கின்றது. இந்த குப்த விஷயத்தை முழுமையாகப் புரிந்துக் கொள்வதில்லை. நினைப்பதும் இல்லை**

- A. சரி
- B. தவறு